# தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்
## நாகப்பட்டினம் - 611 001

**2019-20 ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை கலந்தாய்வு - பத்திரிக்கைச் செய்தி**

தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் வெவ்வேறு பட்டபடிப்புகளுக்கான 2019-20 ஆம் ஆண்டின் மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு சென்னை, வாணியஞ்சாவடியிலுள்ள மீன்வள முதுகலை பட்ட மேற்படிப்பு நிலையத்தில் 14.07.19 அன்று துவங்கியது. கடந்த ஆண்டை (4844) ஒப்பிடுகையில் இவ்வாண்டு (6074) ஏறத்தாழ 1230 மாணவர்கள் அதிகமாக விண்ணப்பித்துள்ளனர். முதல் நாள் (14.07.19) நடைபெற்ற இளநிலை மீன்வளப் பட்டப்படிப்பிற்கான கலந்தாய்வில் தூத்துக்குடி மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (60 இடங்கள்), பொன்னேரி டாக்டர் எம்.ஜி.ஆர் மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (60 இடங்கள்) மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள தலைஞாயிறு டாக்டர் எம்.ஜி.ஆர் மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (40 இடங்கள்) ஆகிய மூன்று கல்லூரிகளில் மொத்தம் உள்ள 168 இடங்களுக்கு 250 மாணவர்கள் கலந்து கொண்டனர். இதில் அனைத்து இடங்களும் நிரப்பப்பட்டன. இக்கலந்தாய்வில் மாற்றுத்திறனாளிகள், விளையாட்டு வீரர்கள், முன்னாள் இராணுவத்தினரின் குழந்தைகள், தொழிற்பிரிவில் பயின்றவர்கள், மீனவர்வர்களின் குழந்தைகள், வெளிநாடுவாழ் இந்தியர்கள் ஆகிய சிறப்பு பிரிவுகளின் கீழ் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் மற்றும் மீன்வளப் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தர் **திரு D. ஜெயக்குமார்** அவர்கள் அரசு முதன்மைச் செயலர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை, **Dr. கே. கோபால்** மற்றும் தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் **சுக. ஃபெலிக்ஸ்** ஆகியோர் முன்னிலையில் பட்டப்படிப்பிற்கான சேர்க்கை ஆணைகளை வழங்கினார். இளநிலை மீன்வளப் பட்டப்படிப்பிற்கான கலந்தாய்வில் முதல் மூன்று இடங்களுக்கான சேர்க்கை ஆணையினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் **செல்வி. அமலா நிவி, செல்வி. மனோ ஸ்டெபி** மற்றும் **செல்வி. ஜெஸி நந்திதா** ஆகிய மாணவர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் அ. சீனிவாசன், மாணவர் சேர்க்கை குழு தலைவர் மற்றும் தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் சீ.அ.சண்முகம், மீன்வளப் பட்ட மேற்படிப்பு நிலையம் முதல்வர் முனைவர் க. காரல் மாாக்ஸ், முனைவர் ஜெயராமன், விரிவாக்க கல்வி இயக்குனர் (பொ), கல்லூரி முதல்வர்கள் மற்றும் பல்கலைக்கழக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இப்பல்கலைக்கழகத்தில் பயின்ற அனைத்து மாணவர்களுக்கும் சிறப்பான வேலைவாய்ப்பு அமைந்துள்ளது. இதுவரை அதிகபட்சமாக 18 சதவீத பேர் தமிழ்நாடு அரசு மீன்வளத்துறை மற்றும் தனியார் நிறுவனங்களிலும், 13 சதவீத பேர் மாநில வேளாண் பல்கலைக்கழங்களிலும் பணி அமர்ந்துள்ளனர். தனியார் நிறுவனங்களுடன் பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மூலம் வளாகத் தேர்வுகளை நடத்தி அந்நிறுவனங்களில் மாணவர்களின் வேலைவாய்ப்பினை உறுதி செய்து வருகிறது. நம் நாட்டின் மீன்வளத்துறையானது சராசரியாக வருடந்தோறும் 7 சதவீதம் வளர்ச்சிப் பெற்று நாட்டின் உள்நாட்டு உற்பத்தியில் ஒரு சதவீதம் பங்களித்து வருவதால் இத்துறையில் வருடந்தோறும் எண்ணற்ற வேலைவாய்ப்புகள் உருவாகும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

தலைவர்
இளநிலை மாணவர் சேர்க்கைகுழு